www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination – 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | Two Hours<br>Gr -13 (2022) | 49 | T | I |

**அறிவுறுத்தல்கள்:**
- ❖ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக
- ❖ 1 தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.

1. நாகரிகமானது நகரத்தோடு இணைந்து வாழ்வின் எல்லாக் கூறுகளையும், விடயங்களையும் உள்ளடக்கியதான நிலையில் நோக்கப்பட்டு -------------------- இடைவெளிக்குப் பொருத்தமானது.
   1) நாகரிகமடைந்த மக்களின் வாழ்வியலைக் குறிக்கும்
   2) நகரவாசிகளின் வாழ்வியலைக் குறிக்கும்
   3) கிராம மக்களின் வாழ்வியலைக் குறிக்கும்
   4) மனிதன் தன் உடல், உள இயல்புகளை வளர்ச்சியடையச் செய்தலைக் குறிக்கும்
   5) மனித சமூகத்தின் வளர்ச்சி நிலைகளைக் குறிக்கும்

2. மக்கபேயரின் காலத்தில் உள்நாட்டுப் போர் மூண்டதற்கான காரணம்
   1) உரோமைப் படைத்தளபதி எருசலேமை முற்றுகையிட்டமை
   2) சைரஸ் மன்னன் பலஸ்தீனாவிற்கு மக்களை அனுமதித்ததை ஏற்றுக் கொள்ளாமை
   3) பபிலோனிப் பேரரசின் அத்துமீறிய நாடுகடத்தல்கள்
   4) அந்தியோக்கு எப்பிப்பானுஸ் கிரேக்கப் பண்பாட்டைப் புகுத்த முற்பட்டமை
   5) மகா அலெக்சாண்டர் எங்கும் ஒரே (கிரேக்க) மதம், மொழி, கலாசாரத்தை நிலைநாட்டுவதை ஏற்காமை

3. கிரேக்கர் உரோமரிடம் இழந்தது
   1) நாகரிகத்தின் சிறப்பு
   2) சமய உரிமை
   3) பண்பாட்டு விழுமியங்கள்
   4) தமது நாடு, மொழி
   5) அரசியல் சுதந்திரம்

4. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A – மெய்யியல் விஞ்ஞான ஆய்வுகளுக்கு வித்திட்டமை
   B – பணப்பாவனை அறிமுகப்படுத்தப்பட்டமை
   C – கட்டடக்கலையில் சிறந்து விளங்கியமை
   D – உலகின் முதல் நாட்காட்டியை உருவாக்கியமை
   E – விவசாயம், கடல்வழி வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை
   இவற்றுள் கிரேக்க கலாசாரம் உலகிற்கு வழங்கிய பங்களிப்புகளாவன
   1) AB 2) BC 3) AD 4) CE 5) AE



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

5. கிரேக்க மெய்யியல் சிந்தனையான நொஸ்டிக்க சிந்தனையுடன் **தொடர்பற்ற** கூற்று யாது?
1) மனித ஆன்மா இவ்வுலகைச் சார்ந்ததல்ல
2) வானினின்று வெளிப்படுத்தப்படும் உண்மை வழியாகவே மீட்பைக் கண்டடைய முடியும்
3) மனித ஆன்மா இறைவனிடமிருந்து பறந்த சிறுபொறியே
4) ஆவி உலகே நன்மைக்குக் காரணம்
5) இறைவன் சடப்பொருள் உலகைப் படைக்கவில்லை

6. இஸ்ரயேலர் பெலிஸ்தியர், அசீரியர், பபிலோனியருக்கு எதிராகப் போரிட இராணுவத்தளமாகப் பயன்படுத்தப்பட்டது
1) எஸ்திரலோன் சமவெளி
2) செப்பேலா சமவெளி
3) ஆக்கோ சமவெளி
4) பெலிஸ்திய சமவெளி
5) சாரோன் சமவெளி

7. எருசலேமுடன் **தொடர்பற்ற** விடயம் யாது?
1) மீட்பு வரலாற்றின் மையமாகத் திகழும் நகராகும்
2) கடவுளின் நகரம் என்றழைக்கப்படுகின்றது
3) கொன்சன்ரைன் மன்னன் இங்கு பெரியதொரு ஆலயத்தைக் கட்டினார்
4) தாவீது மன்னன் உடன்படிக்கைப் பேழையைக் கொண்டு வந்து வைத்தார்
5) தாவீது மன்னனால் அரண்மனை கட்டப்பட்டது

8. சீனாய் உடன்படிக்கையின் மூலம்
1) இஸ்ரயேலர் சாதாரண மேய்ப்பர்களாக தம்மை வடிவமைத்துக் கொண்டனர்
2) இறையாசீர், சாபங்கள், இறைசாட்சிகள் என்பவற்றை அறிந்து கொண்டனர்
3) யோசுவா இஸ்ரயேல் மக்களுக்குத் தலைமை தாங்கி மக்களை நல்வழிப்படுத்தினார்
4) இஸ்ரயேல் மக்கள் ஒரே கடவுள் யாவேயை வழிபட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டனர்.
5) பத்திரத்தை புனிதமான இடத்திலே பாதுகாக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டனர்

9. இஸ்ரயேல் மக்கள் தமக்கு ஓர் அரசனை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டது.
1) சாமுவேலிடம்
2) யோசுவாவிடம்
3) நீதித்தலைவர் சிம்சோனிடம்
4) குருவாக விளங்கிய ஏலியிடம்
5) மெசப்பத்தேமிய மன்னனிடம்

10. எரோபவாம் வடஅரசைத் தனியாகப் பிரித்து ஆட்சி செய்த காலமாகக் கருதப்படக் கூடியது
1) கி,மு. 922 – 901 வரை
2) கி.மு. 962 – 922 வரை
3) கி.மு. 901 – 890 வரை
4) கி.மு. 922 – 933 வரை
5) கி.மு. 921 – 910 வரை

11. இயேசுவின் காலத்தில் உரோமைப் பேரரசராக இருந்தவர்
1) யூலியஸ் சீசர்
2) அகஸ்து சீசர்
3) திபேரியுசீசர்
4) விரேல்லிய சீசர்
5) குளோடியஸ் சீசர்

12. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A – கலிலேயாவின் கிழக்கு, வடக்குப் பகுதிகளுக்கும் குறுநில மன்னராக இருந்தவர்
B – தந்தையைப் போன்று சந்தேகப் பேர் வழியாக விளங்கினார்
C – ஏரோதின் குடும்பத்தில் இவரை தனிப்பிறவி எனலாம்
D – நீதிக்கும், நேர்மைக்கும், அன்பிற்கும் பெயர் போனவர்
E – கலிலேயாவின் மேற்குக் கரையோரத்தில் தலைநகர் ஒன்றினை எழுப்பியவர்
இவற்றுள் ஏரோது பிலிப்புவுடன் தொடர்புடைய கூற்றுக்களாவன
1) ABC 2) BCD 3) ADE 4) ACD 5) ABE

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

13. என்ன துன்பம் நேர்ந்தாலும் பணி செய்து திருச்சபையை நிலை நாட்டுவேதே தனது பணி என்பதைத் தனது கொள்கையாகக் கொண்டவர்
    1) புனித பவுல்
    2) புனித பேதுரு
    3) புனித அத்தனாசியார்
    4) புனித யுஸ்தின்
    5) புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்

14. இஸ்ரயேலர் வரலாற்றில் முறையான அமைப்புக் கொண்டதான மத நிறுவனங்கள் தோற்றம் பெற்றது
    1) பபிலோனிய அடிமைத்தனத்தின் போது ஆகும்
    2) குலமுதுவர் ஆபிரகாம் பலிப்பீடத்தைக் கட்டியெழுப்பிய போது ஆகும்
    3) பாரசீகமன்னன் இஸ்ரயேலரைத் தம் சொந்த நாட்டிற்கு அனுமதித்த போது ஆகும்
    4) நீதித்தலைவர்களால் மக்கள் வழிநடத்தப்பட்ட போது ஆகும்
    5) மன்னர்களின் ஆட்சிக்காலத்திலே ஆகும்

15. மக்களிடம் உரோமர் வசூலித்த வரிப்பணத்தைக் கொள்ளையடிக்க முனைந்தவர்கள்
    1) எசீனியர்
    2) பரிசேயர்
    3) தீவிரவாதிகள்
    4) சதுசேயர்
    5) ஏரோதியர்கள்

16. பின்வருவனற்றுள் மிகச் சரியான சோடி எது?
    1) தெபிலின் - செபம் செய்யும் போது போர்த்திக் கொள்ளும் சால்வை
    2) நல்லுறவுப்பலி - தானியம், இரசம், அகில் பலியாக்கப்பட்டன
    3) சபாத் - உடன்படிக்கையின் சின்னம்
    4) கொயினே - கிரேக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம்
    5) வல்கேட் - தெர்த்தூலியனின் மொழி பெயர்ப்பு

17. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
    A – குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்
    B – மணமுடிக்கும் பெண்ணுக்காக நன்கொடை கொடுத்தல்
    C – மதஒழுக்க விழுமியங்களையும், சமூக நடைமுறைகளையும் கற்றுக் கொடுத்தல்
    D – தொழில்கள் தொடர்பான தொழிற்கல்வியைக் கற்றுக் கொடுத்தல்
    E – சமய சட்டநெறிகளைக் கற்றுக் கொடுத்தல்

    இவற்றுள் யூதகுடும்பத்தில் தந்தையர்களின் பொறுப்பாக அமைவது
    1) ABD
    2) CDE
    3) ABCDE
    4) AC
    5) AD

18. யூதா மக்கபேயுவின் முயற்சியினால் எருசலேம் ஆலயம் மீண்டும் தூய்மையடைந்ததை நினைவு கூரும் விழா அழைக்கப்படுவது
    1) ஹனுக்கா
    2) மசொத்
    3) யோம் கிப்பூர்
    4) சுக்கோத்
    5) நசீர்

19. இயேசுவின் இறையரசு பற்றிய ஐந்து அறிவுரைகளில் முதலாவது
    1) திருச்சபையின் வாழ்வு
    2) உவமைகள்
    3) திருத்தூதரை
    4) மலைப்பொழிவு
    5) நிறைவுகாலம்

20. நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளாகிய மக்களைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊக்குவிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது எழுந்த நூல்
    1) மத்தேயு நற்செய்தி
    2) மாற்கு நற்செய்தி
    3) லூக்கா நற்செய்தி
    4) யோவான் நற்செய்தி
    5) திருத்தூதர் பணிநூல்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

21. இயேசுவின் வாழ்வு, பணி, போதனைகள், அருஞ்செயல்கள் யாவும் இறைதந்தையை வெளிப்படுத்தும் அடையாளங்களாகும். இவ்விறைவெளிப்பாட்டின் உச்சக்கட்டம்
   1) இயேசுவின் புதுமைகளாகும்
   2) இயேசுவின் இறைஆட்சி பற்றிய போதனைகளாகும்
   3) இயேசுவின் மலைப்பொழிவு பற்றிய போதனையாகும்
   4) இயேசுவின் பாதங்கழுவும் நிகழ்வாகும்
   5) இயேசுவின் பாடுகளும் மரணமுமாகும்

22. "மக்களுக்காக ஒருவர் மட்டும் இறப்பது நல்லது" என்று யூதர்களுக்கு ஆலோசனை கூறியவர்
   1) தலைமைக்குருவான அன்னா
   2) தலைமைக்குருவான கயபா
   3) உரோமை ஆளுநர் பிலாத்து
   4) இயேசுவின் சீடனான யூதாஸ்
   5) தலைமைச்சங்க உறுப்பினர்கள்

23. உயிர்த்த கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்ட பவுலை அந்தியோக்கியாவிற்கு அழைத்து வந்து கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கியவர்.
   1) லூக்கா
   2) திமோத்தேயு
   3) ஸ்தேவான்
   4) பர்ணபா
   5) பேதுரு

24. பவுலின் இரண்டாம், மூன்றாம் தூதுரைப் பயணங்களில் பங்கெடுத்த பயணத்தோழர்கள்
   1) பர்ணபா, மாற்கு யோவான்
   2) லூக்கா, திமோத்தேயு
   3) சீலா, யூதா
   4) பர்ணபா, திமோத்தேயு
   5) தீத்து, திமோத்தேயு, சீலா

25. இயேசுக்கிறிஸ்துவின் தியாகம் அவருடைய சிலுவை மரணத்தில் அல்ல அவரின் மனித அவதாரத்தில் அல்ல மாறாக விண்ணக மகிமையைத் துறந்து இவ்வுலகிற்கு வரத் தீர்மானித்த போதே ஆரம்பமாகி விட்டது என்பது வலியுறுத்தப்படுவது
   1) கிறிஸ்தவ குடும்பத்தில்
   2) கிறிஸ்த ஒற்றுமையில்
   3) கிறிஸ்தவ சகோதரத்துவத்தில்
   4) கிறிஸ்துவின் தாழ்மையில்
   5) கிறிஸ்துவின் உயிர்ப்பில்

agaram.lk

26. மக்ரியனின் வேண்டுகோளுக்கிணங்க கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட போது வேதசாட்சி முடி தரித்தவர்கள்
   1) லோறன்சியார், சிக்ரஸ், சிப்பிரியன்
   2) பபியன், லோறன்சியார், சிப்பிரியன்
   3) பெலிக்ஸ், தேனிஸ், சிக்ரஸ்
   4) அந்திரே, லோறன்சியார், சிக்ரஸ்
   5) ஒரிஜின், சிப்பிரியன், கோனோன்

27. பின்வருவனற்றுள் சத்தியத்தின் பாதுகாவலரான யஸ்ரினுடன் **தொடர்பற்ற** கூற்று
   1) மனிதரை மீட்பதற்கான உண்மை மிக்க தத்துவம் கிறிஸ்தவம் ஆகும்
   2) நல்ல கிறிஸ்தவன் தான் உண்மையான அறிவாளி
   3) உரோமைய தெய்வங்களுக்கு பலி செலுத்த மறுத்தவர்
   4) இயேசுக்கிறிஸ்துவே எதிர்பார்க்கப்பட்ட மெசியா எடுத்துக் காட்டுகின்றார்
   5) உரோமையில் பிரபல்யமான கிறிஸ்தவ மெய்யியல் கல்லூரியை நிறுவியவர்

28. பொதுச்சங்களும் அவற்றில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் **சரியான** சோடியை இனங்காண்க
   1) எபேசு – மரியாள் மனித இயேசுவைப் பெற்றெடுத்த தாய்
   2) கொன்ந்தாந்துநோபிள் - தூய ஆவி கடவுள்
   3) கல்சடோன் - கிறிஸ்துவில் மனித சுபாபம் மட்டும் உள்ளது
   4) நிசேயா – வார்த்தை கடவுளிலும் கீழானவர்
   5) எருசலேம் - கிறிஸ்தவனாவதற்கு விருத்தசேதனம் அவசியம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

29. உரோமையின் சீர்குலைந்த நிலையைக் கண்டு பயந்து, அப்பென்னிலுள்ள குகையில் வனவாசம் மேற்கொண்டவர்
   1) புனித பசில்
   2) புனித வனத்து அந்தோனியார்
   3) புனித பக்கோமியுஸ்
   4) புனித அத்தனாசியுஸ்
   5) புனித பெனடிற்

30. கீழைத்தேய துறவறத்தின் தந்தையும், 'உண்மையான துறவறமடம் கிறிஸ்தவ வாழ்வின் மையம்' என்பதையும் தனது பார்வையாகக் கொண்டவர்
   1) புனித பெனடிற்
   2) புனித அத்தனாசியுஸ்
   3) புனித பசில்
   4) எகிப்து அந்தோனியார்
   5) தேப்ஸ் சின்னப்பர்

31. ---------------------------- மறைபரப்பாளரை பிக்டுகளின் அரசன் ஸ்கொட்லாந்தின் மேற்குக் கடற்கரையிலிருந்த -------------------------- பணிபுரிய அனுமதியளித்தார். கீறிட்ட இடைவெளிகளுக்கு பொருத்தமானவை
   1) புனித பற்றிக் - தானெட் தீவில்
   2) புனித கொலம்பா – அயோனா தீவில்
   3) புனித கிரகோரியார் - அயோனா தீவில்
   4) புனித கொலம்பா – தானெட் தீவில்
   5) புனித பற்றிக் - சாபால் தீவில்

32. பின்வருவனற்றுள் அந்தியோக்கிய சிந்தனைக் கூடம் பற்றிய **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.
   1) வார்த்தை கடவுளிலும் கீழானவர் என்ற தப்பறைக்கு வழி வகுத்தது
   2) திருவிவிலியத்தை விளக்க சொல்லுக்குச் சொல் விளக்கும் முறையைப் பயன்படுத்தினர்
   3) கிறிஸ்துவின் மனித இயல்பைக் குறைத்துப் போதித்தனர்
   4) இறையியலில் மூவொரு கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்
   5) தார்சுவைச் சேர்நத ரியுடோர் இக்கல்விக் கூடத்தினால் உருவாக்கப்பட்டவர்

33. துறவிகள் கடுமையான வேலைகளை வயல்களில் செய்வதிலும் பார்க்கப் பண்டைய இலக்கியங்கள், பழைய ஏட்டுச் சுவடிகளைப் பிரதியெடுத்தல், பொருத்தமான உடல் உழைப்பாகத் துறவிகளுக்கு அமையும் என்று கருத்துத் தெரிவித்தவர்
   1) கசியோடோறஸ் எனும் மடாலயச் சிந்தனையாளர்
   2) புனித பெனடிற்
   3) அல்பிறட் லப்பிள் என்னும் வரலாற்று ஆசிரியர்
   4) புனித பசில்
   5) புனித பீற்றர் வால்டோ

34. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A – உரோமைய திருச்சபையின் தலைமைத்துவம் முழுத்திருச்சபைக்கும் பொதுவானது
   B – தூய ஆவியானவர் பிதாவினின்று புறப்பட்டு சுதனூடாக வருபவர்
   C – தூய ஆவியானவர் பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படுபவர்
   D – உரோமை ஆயரும் கொன்ஸந்தாந்து நோபிள் பிதாப்பிதாவும் சமமான தலைமைத்துவம் உடையவர்கள்

   இவற்றுள் கீழைத்தேய, மேலைத்தேய சபைகளின் பிரச்சினைக்கான முக்கிய காரணங்களாகக் கருதக்கூடியவை
   1) AB – DC   2) AC - DB   3) AB - CD   4) A – D   5) DC – AB

35. சிலுவைப் போருக்கான அவசியத்தை வலியுறுத்தியவர்கள்
   1) திருத்தந்தை 2ம் ஊர்பனும், பெனடிற் துறவியரும்
   2) திருத்தந்தை கிரகோரியாரும், இயேசு சபையினரும்
   3) திருத்தந்தை அலெக்சும், பேதுரு துறவியரும்
   4) திருத்தந்தை 2ம் ஊர்பனும், பேதுரு துறவியரும்
   5) திருத்தந்தை 2ம் பிரடரிக்கும், பெனடிற் துறவியரும்



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

36. கி.பி. 9ம், 10 ம் நூற்றாண்டுகளில் திருச்சபையின் ஆன்மீக மறுமலர்ச்சிக்காக உழைத்தவர்கள்
    1) பெனடிற், வல்தேசியன் சபையினர் 2) குளுனி, சிஷ்ரேசியன் சபையினர்
    3) இரவலர் சபையினர், பெனடிற் சபையினர் 4) இயேசு சபையினர், டொமினிக்கன் சபையினர்
    5) கப்புச்சின், கார்மேல் சபையினர்

37. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    A – தப்பறைகளைப் போதிப்பவர்களுக்கு உண்மையைப் போதிப்பது
    B – கிறிஸ்துவின் படையமைப்பு என்ற சபையினூடாக பணிகளை விரிவாக்கியமை
    C – பல இறையியலாளர்களையும், கல்விமான்களையும் உருவாக்கியமை
    D – 3ம் இலத்திரன் சங்கம் மூலம் இச்சபையினரின் பணி பாராட்டப்பட்டமை
    E – தவுத்தின் சகோதரிகள் என்ற மூன்றாம் சபையும் உருவாக்கப்பட்டது
    இவற்றுள் டொமினிக்கன் சபையினருடன் தொடர்புடைய கூற்றுக்களாவன
    1) ABD 2) CDE 3) ABC 4) ACE 5) ADE

38. பின்வருவனற்றுள் மிகச் **சரியான** சோடி எது?
    1) தோமஸ் முன்ற்சர் - பிரேக் கோட்பாடு
    2) கல்வின் - ஜேர்மன் நாட்டு பிரபுகளுக்கு ஓர் அறிக்கை
    3) லூதர் - ஜேர்மன் வழிபாடு
    4) 8ம் ஹென்றி - ஆறுகோட்பாடுகள்
    5) ஜோண்வெஸ்லி - முன்குறித்து வைத்தல்

39. புனித கயித்தானால் குருக்களுக்காக உருவாக்கப்பட்ட துறவற சபை
    1) கிறிஸ்துவின் படையமைப்பு 2) லயன்சில் ஏழைகள் 3) வின்சென்சியன் சபை
    4) தெய்வீக அன்பின் கழகம் 5) கப்புச்சின் சபை

40. ஆன்மீக வளர்ச்சிக்காக லுடால்பு என்பவரால் எழுதப்பட்ட நூல்
    1) ஆன்மீகப் பயிற்சிகள் 2) புனிதர்களின் வாழ்க்கை
    3) கிறிஸ்துநாதர் அனுசாரம் 4) நிறைவாழ்வின் வழி
    5) கிறிஸ்துவின் வாழ்க்கை

41. அலெக்ஸ்சாண்டர் பிளமிங் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவு செய்க
    1) பௌதீக விஞ்ஞானி ஆவார் 2) ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்
    3) எழுதுவினைஞர் 4) சத்திரசிகிச்சை நிபுணர்
    5) 1945இல் நோபல் பரிசினைப் பெற்றவர்

42. புனித அகுஸ்தினார் திருச்சபையின் மறைக்கோட்பாடுகளையும், திருவிவிலிய விளக்கங்களையும் தெளிவாகக் கற்றுக் கொண்டது
    1) இவரது குருவாயிருந்த புனித பெரிய அல்பர்ட் என்பவரது படிப்பினையால்
    2) மிலான் நகர ஆயராயிருந்த புனித அம்புறோசியாரால்
    3) பிளேற்றோவின் மெய்யியல் சிந்தனைகளினால்
    4) சிசரே எழுதிய ஹொரேன்சியுஸ் என்ற நூலைப் படித்ததன் மூலம்
    5) அவரது தாயாரின் செப, தவ முயற்சிகளினால்

43. பின்வருவனற்றுள் புனித தோமஸ் அக்குவினாஸ் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
    1) 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த இறையியலாளராவார்
    2) நேப்பிள்ஸ் பல்கலைக்கழக மாணவராவார்
    3) பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தார்
    4) திருச்சபையின் மறைவல்லுனராவார்
    5) திருத்தந்தை 6ம் ஊர்பனின் ஆலோசகராவார்



agaram.lk

44. பின்வருவனற்றுள் கிறிஸ்தவ ஒப்புவமையை மையமாகக் கொண்டு எழுதியவரும் நூலும்

A – ஜோண் பனியன் - யாத்திரிகனின் பயணம்

B – தோமஸ் ஆ கெம்பிஸ் - கிறிஸ்துவழி வாழ்வு

C – செலானா தோமஸ் - கோபத்தின் நாள்

D – ஜோண் மில்ரன் - மீளப்பெற்ற இன்பவனம்

E – டான்ரே அலிகியேரி - தெய்வீக நகைச்சுவை நாடகம்

1) A 2) B 3) C 4) D 5) E

45. பாடல் திருப்பலிகளின் ஒருங்கமைப்பாளர்களில் முக்கியமானவரும், முதன்மையானவரும்

1) ஹெக்ட் பர்லியொஸ் 2) லுட்விக்வேன் பிதோவன்
3) கபிரியேல் போரே 4) குயிசெப்பே வர்டி
5) ஜோர்ச் பிரட்றிக்

46. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – அரைவட்ட வடிவிலான கூரை

B – பூ வடிவான ஜன்னல்

C – பூரண ஒளியை விட மங்கலான ஒளிப் பயன்பாடு

D – கலையரங்குகள் போலான ஆலயங்கள்

E – சித்திரங்களால் அலங்கரிக்கபட்ட உட்கூரை

மேற்குறித்தவற்றுள் பறோக் கட்டடக் கலையினைக் குறிக்கும் சரியான அம்சங்களாவன

1) AB 2) BC 3) DE 4) ABC 5) AE

47. கீழ்வரும் சோடிச் சொற்களுள் **சரியான** சோடியினைத் தெரிவு செய்க

1) பாதுவா ஆலயம் - டாவின்சியின் இராவுணவு ஓவியம்
2) டொமிற்றிலாவின் கல்லறை - சிலுவை
3) அயிக்கோன் - தாவீது உருவச் சிலை
4) மொசாயிக் சித்திரக்கலை - மரப்பலகையினால் ஆனது
5) மைக்கல் ஆஞ்சலோ - பரிசுத்த குடும்பம்

48. A – தோமையார் கிறிஸ்தவ சபைகளில் தனித்தியங்கும் மிகப்பெரிய சபையாக உள்ளது

B – இதன் தலைமைத்துவமானது கீழைத்தேய பிதாப்பிதாக்கள் முறையை ஒத்ததாகும்

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் குறிப்பது

1) சீரிய கிறிஸ்தவர்களை
2) இலத்தீன் திருச்சபையினரை
3) கானான் நாட்டுத் திருச்சபையினரை
4) சீரோ மலபார் திருச்சபையினரை
5) சீரோ மலங்காரா திருச்சபையினரை

49. அனுராதபுரக்காலத்தில் இலங்கையில் யூதேயக் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பது குறித்த சான்று

1) கொஸ்மஸ் இன்டிக்கோ பிளாஸ்தர் என்ற கிரேக்க வர்த்தகப்பயணியின்
2) பேராசிரியர் செனரத் பரணவிதான என்பவரின்
3) மகாவம்சம் என்ற நூலில்
4) கிறிஸ்தவ சபைகளின் விவரணம் என்ற நூலில்
5) வெளிநாட்டு எழுத்தாளர்களின்

50. பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு கற்றுக் கொடுப்பதை விட கிறிஸ்தவத்தை அறியாத மக்களுக்கு மறைக்கல்வி கற்றுக் கொடுப்பதை விரும்பி தனது பதவியை இராஜனாமா செய்தவர்

1) ஜோசவ்வாஸ் அடிகள் 2) மிகுவேல் டி மெல்லோ 3) மனுவேல் டே மிராண்டா
4) கொண்சால்வெஸ் அடிகள் 5) கார்வாலோ சுவாமிகள்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2022) | 49 | T | II |

**அறிவுறுத்தல்கள் :**

❖ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

1. (i) பலஸ்தீனா நாட்டை ஆக்கிரமித்த பேரரசுகள் நான்கைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) பாலைவனப் பயணத்தின் போது இஸ்ரயேல் மக்கள் பெற்ற இறைபராமரிப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) இலத்தீன் மொழியின் சிறப்பம்சங்களையும், கிறிஸ்தவத்தில் அம்மொழிப்பயன்பாட்டையும் விவரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) சிறந்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களான யோவான், பவுல் ஆகியோர் கிரேக்க சிந்தனைகளைப் பயன்படுத்தி இறையியல் விளக்கங்களை முன் வைத்துள்ளமையை உதாரணங்கள் மூலம் விளக்குக. (8 புள்ளிகள்)

2. (i) துறவற வாழ்வுக்கான ஒழுங்குவிதிகளை எழுதிய நால்வரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) தப்பறைகளுக்கெதிராக கூட்டப்பட்ட நான்கு சங்கங்களையும் அவற்றின் முக்கிய இறையியல் படிப்பினைகளையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) அலெக்சாந்திரிய, அந்தியோக்கிய சிந்தனைக் கூடங்களின் சிறப்பம்சங்களை விவரிக்குக (6 புள்ளிகள்)

(iv) திருச்சபையின் வரலாற்றில் 11ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பிளவிற்கு வழிகோலிய தலைமைத்துவ, மறைக்கோட்பாட்டுக் காரணிகளை விளக்குக. (8 புள்ளிகள்)

3. (i) பறோக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மத்திய காலப்பகுதியில் திருச்சபையின் புதுப்பித்தலுக்கு ஆதரவு நல்கிய நான்கு துறவற சபைகளைக் குறிப்பிட்டு, அவற்றினை ஆரம்பித்து வைத்தவர்களையும் பெயரிடுக. (4 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் குறித்து சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) திருச்சபையின் இறையியலாளரான புனித அகுஸ்தினாரின் பணிகளை விளக்குக (8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

4. (i) தூய பவுலின் திருமடலில் காணப்படும் " தாழ்மை" பற்றிய படிப்பினைகளை உள்ளடக்கிய சுருக்கமான கட்டுரையொன்று எழுதுக.

(ii) 'கிறிஸ்தவ வாழ்விற்கு கிறிஸ்துவின் கீழ்ப்படிவு சவால்கள் நிறைந்த எடுத்துக்காட்டாகும்' ஆராய்க.

(10 x 2 = 20 புள்ளிகள்)

5. (i) இரவலர் சபைகளின் தோற்றத்திற்கு வித்திட்ட காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அச்சபையின் ஏழ்மை, பணி வாழ்வு பற்றி விளக்குக.

(ii) 'கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வின் சவால்களுக்கு இரவலர் சபைகளின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்களை விளக்குக.

.

(10 x 2 =20 புள்ளிகள்)

6. (i) தாவீது மன்னனின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி நிலைகள் குறித்து சுருக்கமான கட்டுரையொன்று எழுதுக.

(ii) இன்று எமது நாட்டில் ஓர் நல்லாட்சியை அமைக்க உம்மால் மேற்கொள்ளக் கூடிய பங்களிப்புக்கள் எவையென விளக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

7. (i) 'ஐரோப்பியப் பழங்குடி மக்களுக்கு உழைப்பின் மேன்மையை உணர்த்தியது துறவிகளின் பெரும் சாதனையாகும்' இக்கூற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(ii) திருச்சபை வரலாற்றில் துறவிகள் அளப்பரிய பணியாற்றிய பொழுதும் இன்றைய இளைஞர்கள், யுவதிகள் துறவறவாழ்வில் தம்மை ஈடுபடுத்த முன்வராமைக்குரிய காரணங்களை ஆராய்க.

(10 x 2 = 20 புள்ளிகள்)

8. (i) யப்பானில் திருச்சபை ஆரம்பித்த போது இயேசு சபையினர், புரட்டஸ்தாந்து சபையினர் ஆற்றிய பங்களிப்புக்களை விவரிக்குக.

(ii) இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்புவதற்கு போர்த்துக்கேய மிசனறிமார் மேற் கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)



agaram.lk